நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) அலுவல் ஆய்வுக் குழுக்கூட்டம் கூட்டப்படுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கலைவாணர் அரங்கத்தில் உள்ள என்னுடைய அறையில் பிற்பகல் 2–00 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறும். அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 3–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 3–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் பிற்பகல் 3–00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

8. இரங்கல் தீர்மானம்

திரு. தா. பாண்டியன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முதுபெரும் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூத்த அரசியல்வாதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராகப் பணியாற்றியவரும், மிகச் சிறந்த பொதுவுடைமைவாதிகளில் ஒருவராக விளங்கியவருமான திரு. தா. பாண்டியன் அவர்கள் மறைவுற்ற செய்தியைக் கேட்டு இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. இப்பெருந்தகையின் மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.*

2021 பிப்ரவரி 26] [பேரவைத் தலைவர்]

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்விதமாக, பேரவையின் நிகழ்ச்சிகள் 45 நிமிடங்கள் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் 3–45 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 3–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் பிற்பகல் 3–45 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

9. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை அலுவல் குறித்த ஒரு தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 235–ன்கீழ் கீழ்க்காணும் தீர்மானத்தை மொழிகிறேன்:*

“இன்றைக்கு (26–2–2021) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது பதவிகளையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கான இடஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தலும் ஆய்வு செய்தலும் மற்றும் நிறைவேற்றுதலும் எடுத்துக்கொள்ளப்பெறும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.